யேசுவின் மூலம் கடவுள் படைக்கும்

புதிய சமுதாயம்

பற்றி கலாத்திய நாட்டு
யேசு கூட்டத்தார்களுக்குப்
பவுல் எழுதிய கடிதம்

Yesuvin Mulam Kadavul Padaikkum - Puthiya Samuthayam

God who create new community through Jesus - Based on Paul's writings to Galatians - Tamil Language

Tamil Vedam (TV)
(A Simple and Meaning-Based Translation)

Trial Version
First Edition: January 2026, Copies: 2,000

© 2026, Translating India's Leading Languages

COPYRIGHT NOTICE

Written permission must be obtained from the Translating India's Leading Languages as copyright holder, prior to the reproduction of any part of this publication in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system.

DECLARATION

We acknowledge that no Bible translation is errorless (perfect) or final; but, we also know that, God for his honour and glory uses even such things which are weak and not perfect. Hence, we do put this forward that as per the changes that take place in Tamil language, the Tamil Vedam translation team always strives to update the translated text by making correction as required. We welcome your corrections and suggestions to the following address.

Published by:

TILL HE COMES

Translating India's Leading Languages
Tamil Vedam, 12/656B, Marappalam, MT Nagar,
Gudalur 643212, The Nilgiris, Tamilnadu.
Email: info@tamilscripture.org | Website: www.tamilscripture.org

அறிமுகம்

யேசு மூலம் கடவுள் மனுக்குலத்திற்கு செய்த நல்ல செய்தி மக்களுக்கு அறிவிக்கப்பட்டபொழுது, இஸ்ரவேல் சமுதாயத்தார்கள் அல்லாதவர்களும், அவைகளை நம்பி, ஏற்றுக்கொண்டு, யேசுவின் போதனைகளின்படி வாழ ஆரம்பித்தார்கள். அப்பொழுது, கடவுள் மோசே மூலம் இஸ்ரவேல் சமுதாயத்திற்குக் கொடுத்த சட்டதிட்டங்களை அவர்களும் கடைப்பிடித்து வாழவேண்டுமா? என்ற கேள்வி யேசுவுடைய சீடர்களிடையே எழுகிறது.

இஸ்ரவேல் சமுதாயத்திற்குக் கடவுள் கொடுத்த சட்டதிட்டங்களை அவர்கள் கடைப்பிடித்து வாழத்தேவையில்லை. ஏனெனில், யேசு முலம் கடவுள் செய்த செயல்களை நம்பி, அதின் அடிப்படையில் வாழ்கிறவர் களைக் கடவுள் சரியானவர்களாக ஏற்றுக்கொள்கிறார் என்று சொல்லுகிறார்.

ஆனால், ஆசியா மைனர் நாட்டுப்பகுதியில், கலாத்தியா பிராந்தியங்களில் இருந்து யேசு கூட்டத்தார்களில் சிலர், யேசு மூலம் கடவுள் செய்தவைகளை நாம் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தாலும், கடவுள் நம்மைச் சரியானவர்களாக ஏற்றுக்கொள்ள, மோசே மூலம் இஸ்ரவேல் சமுதாய மக்களுக்கு அவர் கொடுத்த சட்டதிட்டங்களையும் கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்று வாதிடுகிறார்கள்.

ஆகவே, இதுபோன்ற தவறான உபதேசத்தால், கடவுள் திட்டத்திலிருந்து மக்கள் எப்படி வழிவிலகிப்போகிறார்கள் என்று பவுல் இந்த கடிதத்தில் எழுதுகிறார்.

முதலாவது தான் எப்படி யேசுவின் தூதுவனாக சேவை செய்ய அழைக்கப்பட்டார் என்றும், எந்த மனிதரும் தன்னை அந்த சேவை செய்ய அழைக்கவில்லை என்றும், இஸ்ரவேல் அல்லாத மற்ற சமுதாய மக்களுக்கு, கடவுளைப் பற்றிய நல்ல செய்தியை அறிவிக்கிற, சேவைக்குக் கடவுளே தன்னை அழைத்ததையும், யேசு மூலம் கடவுள் மனுக்குலத்திற்குச் செய்ததை நம்பி, அதின் அடிப்படையில் வாழ்கிறவர் களையே, சரியானவர்களாக கடவுள் ஏற்றுக்கொள்கிறார் என்றும், அவ்வாறாக, கடவுளோடு ஒருவருக்கு ஏற்படுகிற உறவின் அடிப்படையிலேயே, யேசுவின் குணநலன்களை பெற்று வாழமுடியும் என்றும் விளக்குகிறார்.

உள்ளடக்கம்

பாகம் 1 : மனிதர்களைக் கடவுள் காப்பாற்றும் திட்டமே நல்ல செய்தி! 1:1

1.1 கெடுதல்கள் நிறைந்த இந்த உலகத்திலிருந்தும், குற்றங்குறைகளிலிருந்தும் நம்மைக் காப்பாற்ற பரிகார பலியான யேசு (1:1-5)

1.2 கடவுள் நம்மீது அன்பு காட்டுகிறார் என்பதைவிட நல்ல செய்தி என்பது இந்த உலகத்தில் வேறு எதுவும் கிடையாது. (1:6-10)

1.3 மேசியாவைப் பற்றிய நல்ல செய்தியை புரிந்து கொண்டதே. கடவுள் காட்டிய தயவுதான்! (1:11-24)

பாகம் 2 : நல்ல செய்தியின் உண்மை, யேசுவோடு இணைந்து வாழும் புதிய வாழ்க்கையில் அடங்கியிருக்கிறது! 2:1

2.1 யேசு மேசியாவைப் பற்றிய நல்ல செய்தியும், அதில் அடங்கியுள்ள உண்மைகளும் (2:1-5)

2.2 எல்லா சமுதாயத்தார்களுக்கும் கடவுள் சொல்லும் நல்ல செய்தி ஒன்றுதான் (2:6-10)

2.3 மற்ற சமுதாயங்களைக் குறித்த தவறான பார்வை (2:11-18)

2.4 சமுதாய அடையாளத்தோடு வாழும் வாழ்க்கைக்கு யேசுகூட மரித்து, அவரோடு இணைந்து வாழும் புதிய வாழ்க்கை (2:9-11)

பாகம் 3 : யேசு மேசியா மூலம் கடவுள் படைக்கும் புதிய சமுதாயம்! 3:1

3.1 ஆவியானவர் நமக்குள் வசிப்பதால் கிடைத்த புதிய வாழ்க்கை! (3:1-5) 3:1-5)

3.2 கடவுள் பார்வையில் நம்மைச் சரியான நபர்கள் ஆக்கும் நம்பிக்கை! (3:6-9)

3.3 சாபத்திலிருந்து நம்மை விடுவிக்கக் கடவுள் தந்த வாக்குறுதி (3:10-14)

3.4 அனைத்து சமுதாய மக்களுக்கும் கிடைக்கும் கடவுள் புண்ணியம் (3:15-18)

3.5 கடவுள் தந்த சட்டதிட்டத்தின் நோக்கம்! (3:19-25)

3.6 வேறுபாடுகள் இல்லாத புதிய சமுதாயம் (3:26-29)

பாகம் 4 : அப்பா சொத்தில் பங்குபெறும் மேலோக எருசலேமுக்கு உரியவர்கள் 4:1

4.1 அடிமை வாழ்க்கையும், கடவுள் சொத்துக்களில் உரிமை பெற்ற வாரிசு வாழ்க்கையும் (4:1-7)

4.2 கடவுள் தந்த சுதந்திர வாழ்க்கையை அனுபவிக்கிறவர்களும், அடிமைகளாக வாழ்கிறவர்களும்! (4:8-15)

4.3 யேசு மேசியாவின் சாயலைப் பெற்றெடுக்க அனுபவிக்கும் கர்ப்ப வேதனை (4:16-20)

4.4 இஸ்ரவேல் மக்களோடு கடவுள் பண்ணிய இரண்டு ஒப்பந்தங்களும், அதின் அர்த்தங்களும்! (4:21-31)

பாகம் 5 : ஆவியானவரோடு இணைத்து அவர் தரும் ஆசை விருப்பங்களின்படி வாழும் வாழ்க்கை! (5:1)

5.1 சமுதாய சட்ட திட்டங்களுக்கு அடிமைகளாக வாழாதிருங்கள் (5:1-6)

5.2 கடவுள் திட்டத்தைக் குழப்புகிறவர்களுக்கு கடவுள் தண்டனை நிச்சயம் (5:7-10)

5.3 யேசு மேசியா செய்ததை நம்புகிறவர்களைத்தான், கடவுளுக்குப் பிடிக்கும்! (5:11-12)

5.4 ஒரே கட்டளைக்குள் அடங்கும் கடவுள் கட்டளைகள்! (5:13-15)

5.5 ஆவியானவர் தரும் ஆலோசனைகளின்படி வாழும் வாழ்க்கை (5:16-18)

5.6 மனிதர்களுடைய சொந்த ஆசைகள், விருப்பங்கள் (5:22-26)

5.7 ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்கள் (5:22-26)

பாகம் 6 : யேசு மேசியாவோடு இணைந்து புதிய வாழ்க்கை வாழ்கிறவர்களே, உண்மையான இஸ்ரவேலர்கள் (6:1)

6.1 யேசு மேசியாவின் சாயலில் வளர ஒருவருக்கு ஒருவர் செய்யும் உதவி (6:1-6)

6.2 ஆவியானவரின் ஆசை விருப்பங்களின்படி வாழும் பலனுள்ள வாழ்க்கை! (6:7-10)

6.3 யேசு மேசியா செய்து முடித்ததை பெருமையாகப் பேசி, வாழும் வாழ்க்கை! (6:11-17)

பாகம் - 1

1.1 கெடுதல்கள் நிறைந்த உலகிலிருந்தும், குற்றங்குறைகளிலிருந்தும் நம்மைக் காப்பாற்ற பரிகார பலியான யேசு (1:1–5)

கலாத்தியா நாட்டில் வசிக்கும் யேசு கூட்டத்தார்களே! பவுலாகிய நானும் என்னுடன் யேசு மேசியாவிற்கு வேலை செய்யும் அனைவரும் இந்தக் கடிதம் மூலம் உங்களுக்கு எழுதிக்கொள்வது என்னவென்றால் யேசுவின் சிறப்பு தூதுவனாக என்னை இந்த வேலைக்கு என்று எந்த மனிதனும் அனுப்பவில்லை. எந்தவொரு மனிதன் மூலமாகவும் நான் இந்த வேலைக்கு வரவில்லை. மரித்த மக்களிடமிருந்து யேசு மேசியாவை, உயிரோடு எழுப்பிய கடவுள் மூலமாகவே நான் இந்த வேலைக்கு வந்தேன் என்பதை நான் மிகவும் உறுதியாக நம்புகிறேன். நமக்கு அப்பாவாக இருக்கிற கடவுளிடமிருந்தும், நமக்கு ராஜாவாக இருக்கிற யேசு மேசியாவிடம் இருந்தும் தயவும், மன அமைதியும் உங்களுக்கு கிடைப்பதாக.

இந்த உலகை ஆட்டிப்படைக்கும் கெடுதல்களிலிருந்து கடவுள் நம்மைக் காப்பாற்றுகிறார்!

கெடுதல்கள் தான். இந்த உலகத்தை ஆளுகை செய்கிறது. அதிலிருந்து நம்மை காப்பாற்ற நம்முடைய அப்பாவாகிய கடவுள் நம்மீது மனது வைத்தபடியால்தான், நம் குற்றங்குறைகளைத் தீர்க்கும் பரிகாரமாக, யேசு மேசியா, நமக்காகத் தன்னையே பலியாகக் கொடுத்தார். ஆகவே, அவர் ஒருவருக்கே எல்லாக் காலங்களிலும் எல்லாப் புகழும் கிடைப்பதாக. ஆம், அவர் ஒருவருக்கே கிடைப்பதாக.

1.2 கடவுள் நம்மீது அன்பு காட்டுகிறார் என்பதைவிட நல்லசெய்தி என்பது இந்த உலகத்தில் வேறு எதுவும் கிடையாது (1:6–10)

யேசு மேசியா மூலம் கடவுள் உங்கள் மீது தயவு காட்டுகிறார் என்பது எவ்வளவு பெரிய நல்ல செய்தி என்பதை நீங்கள் புரிந்து கொள்ளாமல், வேறு எதையெல்லாமோ கடவுளின் நல்ல செய்தி என்று நீங்கள் தவறாக நினைத்து இவ்வளவு சீக்கிரமாக அவரைவிட்டு விலகுவதை நினைத்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில், யேசு மேசியா மூலம் கடவுள் நமக்குச் செய்ததைத் தவிர்த்து, நல்ல செய்தி என்று ஏதுமில்லை. ஆகவே, நல்ல செய்தி என்று அவர்கள் சொல்லுவது, யேசு மேசியாவைப் பற்றிய நல்ல செய்தியை குழப்புகிற செய்தி. ஆகவே,

மேசியாவைப் பற்றிய, நல்ல செய்தியைக் குழப்புகிற விதமாக யார் பேசினாலும், அது நாங்களாக இருந்தாலும் சரி, கடவுளின் தூதர்களே ஆனாலும் சரி, அவர்கள் மீது கடவுளின் சாபம் வருவது நிச்சயம். நான் சொன்னதையே மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். மேசியாவைப் பற்றிய, நல்ல செய்தியை குழப்புகிற விதமாக, நல்ல செய்தி என்று, யார் எதைச் சொன்னாலும், அவர்கள் மீது கடவுளின் சாபம் வருவது நிச்சயம்.

கடவுளுடைய சாபத்தில் சிக்காமல் இருக்க, அவர் சொன்ன நல்ல செய்தியை குழப்பாதீர்கள்!

மற்றவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் நினைத்து, கடவுளின் நல்ல செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் வேலையை நான் செய்யவில்லை. கடவுள் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடுதான். இந்த நல்ல செய்தியை மற்றவர் களுக்குச் சொல்லும் வேலையை நான் செய்கிறேன். மற்றவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்னத்தில் நான் இந்த வேலையைச் செய்தால், நான் எப்படி யேசு மேசியாவுக்கு வேலை செய்ய முடியும்?

1.3 மேசியாவைப் பற்றிய நல்ல செய்தியை புரிந்துகொண்டதே. கடவுள் காட்டிய தயவுதான்! (1;11–24)

எனக்கு அண்ணன் தம்பி, அக்கா தங்கை போன்றவர்களே! ஒன்றை நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அது என்னவென்றால் : நான் உங்களுக்குச் சொன்ன அந்த நல்லசெய்தி, எந்த ஒரு மனிதனின் எண்ணத்திலும் உண்டானதல்ல. எந்த ஒரு மனிதனிடமும் நான் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் இல்லை, எந்த ஒரு மனிதனும் அதை எனக்குச் சொல்லிக் கொடுத்ததும் இல்லை. ஏனெனில், எனக்கு அந்த நல்ல செய்தியைப் புரியப்பண்ணினவர் யேசு மேசியாதான்.

கடவுளுடைய நல்ல செய்தியைப் புரியச்செய்கிறவர் யேசு மட்டுமே!

ஏனெனில், நான் ஒரு யூத மதத்தவனாய் வாழ்ந்தபொழுது, எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தேன் என்பதை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். யேசு மூலம், கடவுளுக்கு சொந்தமான மக்களை நான் எப்படியெல்லாம் துன்புறுத்தி, அவர்களை அழிக்க நினைத்தேன்

1.1–2 யேசு கூட்டத்தார் கிரேக்க மொழியில் எக்ளிசியா (சபை) என்று குறிப்பிடப்பட்டுள்ளது)
1.1–2 சிறப்பு தூதுவனாக கிரேக்க மொழியில் அப்போஸ்தலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
1.6 நம்முடைய பாவத்திற்கு பரிகாரமாக தன்னையே யேசு மேசியா தந்ததுதான் நல்ல செய்தி!

என்பதையும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். என்னுடைய முன்னோர்களின் பாரம்பரியத்தில் எனக்கிருந்த வைராக்கியம். என் வயதிற்கு சமமாக இருந்த, வேறு எவரிடமும் இருந்ததில்லை.

ஆனால் என் அம்மாவுடைய வயிற்றில், நான் இருக்கும்பொழுதே, என்னைப் பற்றி முழுவதும் அறிந்த கடவுள், என்னை அவருடைய வேலைக்காக அப்பொழுதே பிரித்து வைத்திருந்தபடியால், சரியான நேரம் வந்தபொழுது, அவருடைய தயவு எனக்குக் கிடைத்தது. ஆகவே, அவருடைய மகனாகிய யேசு மேசியா மூலம், மனித குலத்திற்கு கடவுள் செய்ததை, மற்ற எல்லா சமுதாய மக்களுக்கும் சொல்லும்படியாக அவரைப் பற்றி நான் புரிந்துகொள்ளவேண்டும் என்பது அவருடைய விருப்பம். அவ்வாறு அவர் என்மீது தயவு வைத்தபடியால், நான் வேறு யாரிடமும் ஆலோசனை கேட்கவில்லை. மேலும், எருசலேம் நகருக்குப் போய், அங்கிருந்த யேசுவின் சிறப்புத் தூதுவர்களைச் சந்தித்து, இது பற்றிய ஆலோசனைகளை கேட்டுத் தெரிந்து கொள்ளும் விருப்பம் எதுவும் இல்லாமல், அரபி நாட்டிற்குப் போனேன், பின்பு, தமஸ்கு நாட்டிற்கு திரும்பி வந்தேன்.

நல்ல செய்தியைப் புரிந்து கொள்ள கடவுள் தயவு வேண்டும்!

இவ்வாறாக மூன்று வருடங்கள் முடிந்த பின்புதான், எருசலேம் நகரில் வசித்து வந்த பேதுருவை தொடர்பு கொள்ள நினைத்து, அங்கு போய் அவரோடு பதினைந்து நாட்கள் தங்கியிருந்தேன். யேசுவின் தம்பியாகிய யாக்கோபு தவிர, வேறு எந்த யேசுவின் தூதுவர்களையும் நான் அப்பொழுது சந்திக்கவில்லை. நான் இந்த கடிதத்தில் எழுதுகிற எதுவுமே பொய் இல்லை. இவையனைத்தும் உண்மை என்பது கடவுளுக்குத் தெரியும். அதற்குப் பின்பு நான், சீரியா, சிலிசியா நாட்டுப் பகுதிகள் வழியாக பயணமாக வந்தேன். ஆகவே, யூதேயா நாட்டுப் பகுதிகளில் உள்ள யேசு கூட்டத்தார்கள் எவரும் என்னை அதுவரை பார்த்ததுகூட கிடையாது. ஆனால், முன்பு நம்மை துன்புறுத்தி, அழிக்க நினைத்த மனிதன் இப்பொழுது நாம் நம்புகிற அந்த நல்ல செய்தியை மக்களுக்கு சொல்லுகிற வேலையைச் செய்கிறான் என்று, என்னைப் பற்றிய செய்தியை அவர்கள் கேள்விப்பட்டு, அவ்வாறு, என்மீது கடவுள் காட்டிய தயவுக்காக அவருக்கு நன்றி சொல்லி வந்தார்கள்.

சிந்திக்க சில கேள்விகள்:

1. கடவுள் நம்மை எதிலிருந்து காப்பாற்றுகிறார்?

2. யேசு நமக்காக பரிகார பலியானார் என்பதன் அர்த்தம் என்ன?

3. நமக்குக் கிடைத்த நல்ல செய்தி என்ன?

4. யார் மீது கடவுளுடைய சாபம் வரும்? அது ஏன்?

5. கடவுளுடைய நல்ல செய்தியை பவுல் எப்படிப் புரிந்து கொண்டதாக விளக்குகிறார்?

முக்கிய கருத்துக்களின் சுருக்கம்

- கடவுள் மனிதர்களுக்குச் சொல்லும் நல்ல செய்தி ஒன்றுதான் - அது யேசுவைப் பரிகார பலியாக கொடுத்து, மக்கள் மீது காட்டு அன்பு!

பாகம் - 2

2.1 யேசு மேசியாவைப் பற்றிய நல்ல செய்தியும், அதில் அடங்கியுள்ள உண்மைகளும் (2:1–5)

பதினான்கு வருடங்களுக்கு பின்புதான், பர்னபாவோடு எருசலேம் நகருக்கு நான் மீண்டும் போனேன். அப்பொழுது தீத்துவையும் கூட்டிக் கொண்டு போனோம். கடவுள் என்னை வழி நடத்தியபடியால் தான் அவ்வாறு நான் அங்கு போனேன். யேசுவின் மூலம் கடவுள் செய்ததை நம்பி அங்கு வாழ்ந்த கூட்டத்தார்களுக்குத் தலைவர்களாக இருந்தவர் களைச் சந்தித்தேன். அவர்கள் எல்லோராலும் மதிக்கப்பட்டார்கள். அவர்களோடு மாத்திரம் நான் இருந்த நேரங்களில், யேசு மேசியாவின் மூலம் கடவுள் நமக்குத் தந்த அந்த நல்லசெய்தியை, யூதர்கள் அல்லாத மற்ற சமுதாய மக்களிடம் நான் அறிவித்ததை, விவரித்து சொன்னேன். ஏனென்றால், என்னுடைய கடின உழைப்புகள் எதுவும் வீணாகப் போய்விடக்கூடாது என்ற எண்ணத்தில் அப்படிச் செய்தேன். இருந்த போதிலும், உண்மை என்னவென்றால்: என்னுடன் வந்த தீத்து, ஒரு யூதனாக இல்லாதிருந்தும், "நீ சுன்னத் பண்ண வேண்டும்" என்று அந்தத் தலைவர்கள் ஒருவரும் அவனை கட்டாயம் பண்ணவில்லை.

ஆனால், தீத்துவை சுன்னத் செய்யச்சொல்லி, அங்கு ஏற்பட்ட குழப்பத்திற்கு யேசு மேசியாவைப் பற்றிய, நல்ல செய்தியைக் குழப்புகிற வேறுசிலர்கள் காரணமாக இருந்தார்கள். எப்படியெனில், மேசியாவுடன் இணைந்தபடியால் நமக்குக் கிடைத்த சுதந்திரமான வாழ்க்கை எப்படிப் பட்டது? என்பதை பார்த்து, தங்களுடைய யூத சமுதாய கட்டுப் பாடுகளுக்குள் நம்மை எப்படிக் கொண்டு வருவது என்று, அவர்கள் தந்திரம் பண்ணினார்கள். ஆனால், யேசு மேசியாவைப் பற்றிய நல்ல செய்தியும், அதில் அடங்கியுள்ள உண்மையும் உங்கள் வாழ்வில் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும் என நாங்கள் நினைத்தபடியால், அவர்கள் சொன்னவைகளுக்கு நாங்கள் ஒரு துளி கூட ஒத்துக் கொள்ளவில்லை.

2.3 சுன்னத் ஆபிரகாமிற்கு கடவுள் கொடுத்த கட்டளைப்படி, யூதர்கள் தங்களுடைய ஆண்பிள்ளைகளுக்கு ஆண்குறி நுனித்தோலை வெட்டும் சடங்குதான் சுன்னத்

2.2 எல்லா சமுதாயத்தார்களுக்கும் கடவுள் சொல்லும் நல்ல செய்தி ஒன்றுதான்! (2:6–10)

அதுமாத்திரமல்ல, எருசலேம் நகரில் இருந்த யேசு கூட்டத்தார்களின் தலைவர்கள், யேசுவைப் பற்றி நான் சொல்லிக் கொடுத்தவைகளுக்கும் அதிகமாக வேறு எதையும் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை என்பதையும் நான் புரிந்து கொண்டேன். மேலும், மனிதர்கள் அனைவரையும் கடவுள் சமமாகவே பார்க்கிறார்! அவர் ஒருவரை தாழ்வாகவும், இன்னொருவரை உயர்வாகவும் நினைப்ப தில்லை.

ஒருவரை தாழ்வாகவும், இன்னொருவரை உயர்வாகவும் நினைப்பதில்லை!

ஆகவே, யூத சமுதாய மக்களுக்கு அந்த நல்ல செய்தியை அறிவிக்க பேதுருவைப் பயன்படுத்துகிற அதே கடவுள் மற்ற சமுதாய மக்களுக்கு அந்த நல்லசெய்தியை அறிவிக்க என்னைப் பயன்படுத்து கிறார் என்பதையும், நான் போதித்தவைகளுக்கு அதிகமாக அவர்கள் வேறு எதையும் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை என்பதையும், ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில், யூத சமுதாய மக்களுக்கு தன்னுடைய தூதுவனாக வேலை செய்ய பேதுருவை ஏற்படுத்திய அதே கடவுள்தான். மற்ற சமுதாயத்தார்களுக்கு தன்னுடைய தூதுவனாக என்னை அனுப்பி இருக்கிறார். ஆகவே, யேசு மூலம் கடவுளை நம்பி வாழும் எருசலேம் நகர மக்களுக்கு முக்கிய தலைவர்களாக கருதப்பட்ட யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியவர்கள், கடவுள் எனக்குத் தந்த வரங்களைப் பற்றிப் புரிந்து கொண்டு, நானும் பர்னபாவும் அவர்களைப் போலவே மற்ற சமுதாய மக்களுக்கு கடவுள் சேவை செய்கிறோம் என்பதை ஏற்றுக் கொண்டு அன்பாக பழகினார்கள். அவர்கள் எங்களுக்குச் சொன்ன ஒரே ஆலோசனை என்னவென்றால், ஏழைகளுக்கு கருணை காட்டுங்கள் என்பதாகும். அவ்வாறு அவர்களுக்கு கருணை காட்டி, கடவுளுடைய வேலையைச் செய்ய நானும் ஏற்கனவே மிகுந்த ஆவல் உள்ளவனாகவே இருந்தேன்.

2.3 மற்ற சமுதாயங்களைக் குறித்த தவறான பார்வை (2:11–18)

பின்பு, அந்தியோகியா நகரத்திற்கு பேதுரு வந்திருந்தபொழுது, அவர் செய்தது தவறு என்று நான் நேரடியாகவே அவருக்கு சொன்னேன்.

ஏனெனில் மற்ற சமுதாயத்தைச் சார்ந்த யேசு கூட்டத்தார்களோடு அதற்கு முன்பு, இணைந்து, ஐக்கியமாக அவர் சாப்பிட்டு வந்தார் ஆனால், எருசலேம் நகரிலிருந்து யாக்கோபு வந்தவுடன், யூத சமுதாயத்தைச் சார்ந்த யேசு கூட்டத்தார்களுக்குப் பயந்து, அவர்களோடு தான் அவ்வாறு ஐக்கியமாக இல்லாதது போல காட்ட மற்ற சமுதாய மக்களை விட்டு ஒதுங்கியிருந்தார். ஆகவே, யூத சமுதாயத்தைச் சார்ந்த, மற்றவர்களும், அவரோடு சேர்ந்து அவ்வாறு செய்தபொழுது, என்னோடிருந்த பர்னபாவும் அவ்வாறு செய்யத் தொடங்கினான். இவ்வாறாக அவர்களுடைய செயல்கள், நாங்கள் மக்களுக்குச் சொல்லுகிற நல்ல செய்தியின் உண்மை யோடு ஒத்துப்போகாததை நான் உணர்ந்து, பேதுருவிடம், நீ ஒரு யூத சமுதாயத்தானாக இருந்தும், இப்பொழுது யூத சட்டதிட்டங்கபை் பின்பற்றி வாழும் ஒரு யூதரைப் போல வாழவில்லைதானே? ஆகவே, நீங்கள் யூத சமுதாயத்தார்களைப் போல வாழவேண்டும் என்று, மற்ற சமுதாயத்தார் களை நீ கட்டாயம் பண்ணுவது எப்படிச் சரியாகும்? என்று அனைவர் முன்பாகவும் நான் கேட்டேன்.

உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று மனிதர்களைப் பிரித்து பார்ப்பது, நல்ல செய்தியின் உண்மையோடு ஒத்துப்போவதில்லை!

யூத சமுதாயத்தில் பிறந்தவர்களாகிய நாம், மற்ற சமுதாயத் தார்களை, கடவுள் பார்வையில் குற்றங்குறை உள்ளவர்கள் என்று ஒரு காலத்தில் நினைத்தோம். ஆனால், மோசே மூலம் யூத சமுதாயத்திற்குக் கடவுள் தந்த சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்வதால் (மட்டும்), யாரையும் தனக்குப் பிடித்த சரியானவராக கடவுள் ஏற்றுக் கொள்வதில்லை என்பதை இப்பொழுது புரிந்து கொண்டோம். மாறாக, யேசு மேசியா மூலம், அவர் நமக்காக செய்து முடித்ததை எவர் நம்புகிறவர்களோ, அவர்களை மாத்திரமே, அவர் தனக்குப்பிடித்த சரியானவராக ஏற்றுக் கொள்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொண்டோம் தானே! யேசு மேசியா மூலம் கடவுள் செய்த செயலை நாம் நம்புவதால், அவருக்குப் பிடித்த சரியானவர்களாக மாறுகிறோம் என்பதனை புரிந்து கொள்வதால், இதற்கு முன்பு நாம் குற்றங்குறை உள்ளவர்களாக இருந்தோம் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றோம்தானே! அப்படியானால், எல்லோரும் குற்றங்குறை

உள்ளவர்களாவதற்கு, யேசு மேசியா காரணமாகிறாரா? இல்லையில்லை! எப்படியெனில், இந்தச் சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்வதால் நான் கடவுளுக்குப் பிடித்த சரியானவனாக வாழ முடியாது என்று சொல்லி நான் ஒதுக்கியதை நான் மீண்டும் பின்பற்ற ஆரம்பித்தால், நான் குற்றம் செய்கின்றேன் என்றுதானே அர்த்தமாகிறது?

2.4 சமுதாய அடையாளத்தோடு வாழும் வாழ்க்கைக்கு யேசுகூட மரித்து, அவரோடு இணைந்து வாழும் புதிய வாழ்க்கை (2:9–21)

என்னுடைய சமுதாய சட்டதிட்டங்களை நான் பின்பற்றி வாழ்ந்த பொழுது, கடவுள் பார்வையில் நான் சரியானவனாக வாழ, அது எனக்கு எந்த உதவியையும் செய்யவில்லை. ஆகவே, என்னுடைய பழைய வாழ்க்கை முறையின்படி, கடவுளோடு என்னை இணைத்துக் கொண்டு வாழும் முயற்சியை விட்டு விட்டு, என்மீது அன்புவைத்து எனக்காக மரித்த யேசு மேசியாவோடு, என் பழைய வாழ்க்கை மரித்து விட்டதையும், தன் மகனாகிய யேசுவை நம்பி வாழ, மீண்டும் என்னைப் பிழைக்க வைத்திருக்கிறார் என்பதையும் நம்பி வாழ்கிறேன். ஆகவே, இப்பொழுது நான் அல்ல, அந்த யேசுதான் எனக்குள் வாழ்கிறார்.

சமுதாய சட்டதிட்டங்களின்படி வாழ்கிறவர்கள் யேசு மரித்ததால் கிடைக்கும் நன்மைகளை இழக்கிறார்கள்!

அவ்வாறு நமக்குக் கிடைத்த கடவுள் தயவை நாம் ஏன் தள்ளிவிட வேண்டும்? சமுதாய சட்டதிட்டங்களின்படி வாழ்ந்து, கடவுளுக்குப் பிடிதத மனிதனாகும் வாய்ப்பிருந்தால், யேசு மேசியா நமக்காக மரித்ததில், ஒரு பயனும் இல்லை என்றுதானே அர்த்தமாகிறது!

சிந்திக்க சில கேள்விகள்:

1. யூத சமுதாயத்தில் சுன்னத் ஏன் செய்கிறார்கள்?

2. தீத்துவை சுன்னத் செய்ய வற்புறுத்தியவர்களின் நோக்கம் என்ன?

3. எருசலேம் நகர யேசு கூட்டத்தார்களுக்கு முக்கிய தலைவர்கள் யார் யார்?

4. மற்ற சமுதாய மக்களுக்கு நல்ல செய்தியை அறிவிக்கக் கடவுள் யார் யாரைப் பயன்படுத்தியதாக பவுல் குறிப்பிடுகிறார்?

5. பவுல், பேதுருவிடம் அவர் செய்யும் எந்த செயல் சரியில்லை என்று சொன்னார்? அது ஏன்?

6. கடவுள் ஒருவரைச் சரியான நபர் என்று ஏற்றுக்கொள்வதைப் பற்றி பவுல் புரிந்து கொண்டதை எப்படி விளக்குகிறார்?

7. யேசுவுடைய மரணத்தால் தனக்கு கிடைத்த பயன் என்ன என்று பவுல் சொல்கிறார்?

முக்கிய கருத்துக்களின் சுருக்கம்:

- யேசு மேசியாவோடு இணைந்தவர்களுக்கு கிடைக்கும் சுதந்திரமான வாழ்க்கை!

  மனிதர்கள் அனைவரையும் (சமுதாய வேறுபாடுகள் இல்லாமல்) கடவுள் சமமாகவே பார்க்கிறார்.

  மற்ற சமுதாய மக்கள் கடவுள் பார்வையில் குற்றங்குறைவுள்ளவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள் என்று பார்ப்பது தவறு!

  சமுதாய சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்வதால், கடவுள் எவரையும் சரியான நபர் என்று ஏற்றுக்கொள்வதில்லை.

  யேசு மேசியா மூலம் கடவுள் செய்த பரிகார பலியை நம்புகிறவர் களையே சரியான நபர் என்று கடவுள் ஏற்றுக்கொள்கிறார்.

  பழைய சடங்குகளோடு வாழும் வாழ்க்கையை யேசுவின் மரணத்தோடு முடிவுக்குக் கொண்டு வருகிறவர்களுக்கு, யேசுவோடு இணைந்து வாழும் புதிய வாழ்க்கை கிடைக்கிறது.

பாகம் - 3

3.1 ஆவியானவர் நமக்குள் வசிப்பதால் கிடைத்த புதிய வாழ்க்கை (3:1–5)

யேசு மேசியா மூலம், கடவுள் செய்ததை நம்பி வாழும் கலாத்திய நாட்டு மக்களே! உங்களுக்கு ஏன் அறிவில்லாமல் போனது? சிலுவை மரத்தில் உங்களுக்காக யேசு மேசியா. மரித்ததை நீங்கள் கண்முன் பார்த்ததுபோலத் தானே, அவர் மூலம் கடவுள் உங்களுக்காகச் செய்ததை நம்பினீர்கள். அதை எல்லாம் மறக்கும்படி உங்கள் மனதை எவன் மயக்கினான்? நான் ஒன்று கேட்கிறேன். உங்கள் சமுதாய சட்ட திட்டங் களை நீங்கள் கடைப்பிடித்து வாழ்ந்ததால் சுத்தமான ஆவியானவர் உங்களுக்குள் வசிக்க வந்தாரா? அல்லது, சிலுவை மரத்தில் உங்களுக்காக யேசு மேசியா செய்ததை நீங்கள் நம்பி வாழ ஆரம்பித்த பொழுது, அவர் உங்களுக்குள் வசிக்க வந்தாரா? சுத்தமான ஆவியானவர் மூலம் தொடங்கிய, உங்கள் புதிய வாழ்க்கையை உங்கள் சொந்த மனித முயற்சிகளால் காரியங்களை செய்வதின் மூலம் முடித்துவிடலாம் என நினைக்கிறீர்களோ? அந்த அளவிற்கு உங்களுக்கு அறிவில்லாமல் போய்விட்டதா?

ஆவியானவர் நமக்குள் வசிக்க வந்ததிலிருந்து துவங்கும் புதிய வாழ்க்கை!

அப்படியானால், யேசு மேசியா செய்தவைகளை நம்பி, புது மனிதனாக வாழ நீங்கள் இதுவரை அனுபவித்த கஷ்டங்கள் எல்லாம் எதற்காக? அதெல்லாம் வீண் என்று நினைக்கிறீர்களோ? தம்முடைய சுத்தமான ஆவியானவரை உங்களுக்குள் அனுப்பி, தம்முடைய சக்தியால் அநேக காரியங்களைச் செய்தாரோ? அதெல்லாம் நீங்கள் உங்கள் சமுதாய சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து நடந்ததால், அப்படிச் செய்தாரா? அல்லது, அவர் சிலுவையில் மரித்ததையும், உயிரோடு எழுந்ததையும் நீங்கள் கேட்டு, நம்பி வாழ்ந்ததால்,அப்படிச் செய்தாரா?

3.2 கடவுள் பார்வையில் நம்மைச் சரியான நபர்கள் ஆக்கும் நம்பிக்கை! (3:6–9)

ஆபிரகாம் கடவுளை நம்பினார்! ஆகவே, அவரைத் தன்னோடு பழகத் தகுதியான சரியான நபராகக் கடவுள் ஏற்றுக்கொண்டார் என்று தானே, அவர் புத்தகத்தில் எழுதியிருக்கிறது?

3.6 அவர் புத்தகத்தில் ஆதியாகமம் 15:6
3.8 ஆதியாகமம் 12:3; 18:18; 22:18; 3:10 உபாகமம் 27:26 3:11 ஆபகூக் 2:4

கடவுள் புண்ணியம் பெற்ற சந்ததி!

அதன் அடிப்படையில், எவரெல்லாம் ஆபிரகாமைப் போல கடவுளை நம்புகிறார்களோ, அவர்களே அவருடைய சந்ததியில் பிறந்தவராக கருத முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எப்படி யெனில், அனைத்து சமுதாய மக்களும் ஆபிரகாமைப் போல கடவுளை நம்பும்பொழுது, அனைத்து சமுதாய மக்களும் தன்னோடு பழகத் தகுதியான சரியான நபர்களாகக் கடவுள் கருதுகிறார் என்பதை முன்பாகவே அறிந்துதான், அனைத்து சமுதாய மக்களுக்கும் உன் மூலம் நல்லது நடக்கும் என்ற நல்லசெய்தி அவருக்கு அறிவிக்கப்பட்டதாக கடவுள் புத்தகம் சொல்கிறது. ஆகவே, ஆபிரகாம் கடவுளை நம்பி, அவரிடம் புண்ணியம் பெற்றதுபோல, யேசு மேசியா மூலம், கடவுள் செய்ததை நம்புகிற அனைவருமே, ஆபிரகாம் போல, கடவுளின் புண்ணியத்தைப் பெறுகிறார்கள்.

3.3 சாபத்திலிருந்து விடுவிக்க கடவுள் தந்த வாக்குறுதி (3:10–14)

ஆனால் மோசே மூலம் கடவுள் கொடுத்த சட்டதிட்டங்களை ஒன்றுவிடாமல் கடைப்பிடித்து வாழாதவர்கள் சாபத்திற்குரியவர் என்று அவர் புத்தகத்தில் எழுதி இருக்கிறதே! ஆகவே, அந்தச் சட்டதிட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்து, கடவுள் பார்வையில் சரியான நபராக மாற நினைக்கிற அனைவருமே சாபத்தின் கீழ்தானே வாழ்கிறார்கள்.? ஆகவே, சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்வதால், கடவுள் பார்வையில் ஒருவரும் சரியான நபராக வாழ முடியாது என்பது தெளிவாகப் புரிகிறதுதானே? ஏனெனில், தனக்காக கடவுள் செய்ததை நம்புகிற ஒருவரே, அவர் பார்வையில் சரியான நபராகி, காலங்காலமாக அவரோடு வாழ்கிறார் என்று அவருடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறது. எப்படியெனில், ஒன்றுவிடாமல், சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்கிற ஒருவரே, கடவுள் பார்வையில் வாழத்தகுதி வாய்ந்தவர் என்று சொல்லுகிற படியால், சட்ட திட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்கிறதற்கும், கடவுள் செய்ததை நம்பி வாழ்கிறதற்கும் இருக்கிற வித்தியாசம் புரிகிறதுதானே?

மரத்தில் தூக்கி கொல்லப்பட்டவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதி இருக்கிறபடியால், யேசு நமக்காக சிலுவை மரத்தில் தொங்கி மரித்ததை நம்புவதின் மூலம், சட்டதிட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து வாழ முடியாமல், சாபத்தின் கட்டிலிருந்த நம்மை விடுவித்து, கடவுளின் புண்ணியம் பெற்றவர்கள் ஆகிறோம் என்பது புரிகிறதுதானே? இதன் அடிப்படையிலேயே, ஆபிரகாமிற்குக் கிடைத்த கடவுளின் புண்ணியம், யேசு மேசியாவுடன் இணைவதால் இந்த உலகிலுள்ள அனைத்து சமுதாய மக்களுக்கும் கிடைக்கிறது. சுத்தமான ஆவியானவர்தான். கடவுள் நமக்குத் தருவேன் என்று வாக்குறுதி கொடுத்த அந்த புண்ணியம்.

சுத்தமான ஆவியானவர்தான், கடவுள் நமக்குத் தருவேன் என்று வாக்குறுதி கொடுத்த அந்த புண்ணியம்

3.4 அனைத்து சமுதாய மக்களுக்கும் கிடைக்கும் கடவுள் புண்ணியம் (3:15–18)

என் அண்ணன், தம்பி, அக்கா தங்கைகளே! இந்த உலக வழக்கத்தின் மூலம் நான் இதை உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். எப்படியெனில், இரு நபர்கள் சேர்ந்து, ஒரு காரியத்தைப் பற்றி ஒப்பந்தம் பண்ணிக்கொண்டால், யாராலும் அந்த ஒப்பந்தத்தில் உள்ளதை நீக்கவோ, அதில் வேறு ஒரு கருத்தைச் சேர்க்கவோ முடியாது.

வாக்குறுதிக்குரிய மகன் யேசு மேசியாதான்!

அப்படியாக நான் உன் மகன் மூலம் அனைத்து சமுதாய மக்களுக்கும், என் புண்ணியத்தைக் கொடுப்பேன் என்று ஆபிரகாமோடு கடவுள் ஒப்பந்தம் பண்ணினபொழுது உன் மகன்கள் மூலம் என்று பலரைக் குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்யாமல், ஒருவரைக் குறித்தே ஒப்பந்தம் செய்தார். அந்த ஒருவர்தான். யேசு மேசியா அப்படியாக, நானூற்று முப்பது வருடத்திற்கு முன்பு ஆபிரகாமோடு கடவுள் செய்த அந்த ஒப்பந்தம் மூலம், அவருக்கு வாக்குறுதி கொடுத்ததை, அதற்குப் பின்பு, கடவுள் மோசே மூலம் இஸ்ரவேல் சமுதாயத்திற்குக் கொடுத்த சட்டதிட்டங்களால் எப்படி மாற்ற முடியும்? அதுமாத்திரமல்ல, கடவுள் தன்னோடு செய்த அந்த ஒப்பந்தத்தின் மூலமாகவே, வாக்குறுதி கொடுத்த, அந்தப் புண்ணியத்தையும் ஆபிரகாம் பெற்றார். அப்படி இருக்கும்பொழுது, சட்டதிட்டங்களைக் கைக்கொள்வதால் அந்தப் புண்ணியத்தைப் பெறமுடியும் என்று சொல்வது எப்படிச் சரியாகும்?

3.5 கடவுள் தந்த சட்டதிட்டத்தின நோக்கம்! (3:19–25)

அப்படியெனில், ஆபிரகாமிற்கு அவ்வாறு கடவுள் வாக்குறுதி கொடுத்த பின்ப, இஸ்ரவேல் சமுதாயத்திற்கு சட்டதிட்டங்களை ஏன் கொடுத்தார்? என்று நீங்கள் கேட்கலாம். கடவுள் ஆபிரகாமுக்கு வாக்குறுதி கொடுத்த அந்த சந்ததி யேசு மேசியாதான். அவர் வரும்வரை இஸ்ரவேல் மக்கள் செய்யும் குற்றங்குறைகளைக் சுட்டிக்காட்டவே அந்தச் சட்ட திட்டங்களைக் கடவுள் கொடுத்தார். கடவுள் அதைத் தன் தூதர்கள் மூலமாக, மோசேயிடம் கொடுத்தார். ஏனெனில், மனிதர்களுக்கும், கடவுளுக்கும் இடையில் மோசேதான் அப்பொழுது நடுவராக இருந்து வந்தார். ஆனால் ஆபிரகாமிற்கு கடவுள் வாக்குறுதி கொடுக்கும்பொழுது, அவருக்கும், ஆபிரகாமிற்கும் இடையில் ஒருவரும் நடுவராக இருந்ததில்லை. கடவுள் ஆபிரகாமிடம் நேரடியாகவே வாக்குறுதி கொடுத்தார்.

குற்றங்குறைகள் அனைவரையும் ஆளுகை செய்கிறது என்று, சுட்டிக்காட்டவே சட்டதிட்டங்கள்!

அப்படியெனில், அவர் ஆபிரகாமிற்கு வாக்குறுதி கொடுத்த, புண்ணியத்தை இழந்து போகவா அந்த சட்டதிட்டங்களை கொடுத்தார்? என நீங்கள் கேட்கலாம். இல்லவே இல்லை! மாறாக அந்தச் சட்டதிட்டங்கள் மூலம் குற்றங்குறைகளிலிருந்து நாம் நிவிர்த்தியாகி, காலங்காலமாக கடவுளோடு சேர்ந்து வாழும் புண்ணியத்தை நாம் பெற்று இருப்போமானால், அந்த சட்டதிட்டங்களே போதுமானதாக இருந்திருக்குமே? மாறாக, நம் அனைவரையும் குற்றங்குறைகள் ஆளுகை செய்கிறது என்று சட்டதிட்டங்கள் மூலம் சுட்டிக்காட்டி, ஆபிரகாமிற்கு கடவுள் வாக்குறுதி கொடுத்த புண்ணியத்தை யேசு மேசியா நமக்காகச் செய்ததை நம்புவதின் மூலமாகப் பெறவேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தார்.

3.6 வேறுபாடுகள் இல்லாத புதிய சமுதாயம் (3:26–29)

ஆகவேதான், யேசு மேசியா மூலம், கடவுள் நமக்குச் செய்ததை நம்புகிற நாம் அனைவருமே அவருடைய பிள்ளைகளாக ஆகிறோம். எனவே, யேசு மேசியா நமக்காக மரித்ததையும், உயிரோடு எழுந்ததையும் நம்பி, அவர் மரணத்திலும், அவர் உயிர்த்தெழுதலிலும் பங்குபெற தண்ணீரில் முழுக்கு எடுக்கும் நீங்கள் அனைவரும் புதிய ஆடையை அணிவதுபோல, யேசுவை உடுத்திக் கொள்ளுகிறீர்கள்.

தண்ணீரில் முழுக்கு எடுத்தவர்கள் உடுத்தும் புதிய உடை யேசு!

அப்படிப்பட்ட நமக்குள், இஸ்ரவேல் சமுதாயத்தார்கள், மற்ற சமுதாயத்தார்கள் என்ற வித்தியாசமோ, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசமோ, பணக்காரர், ஏழை என்ற வித்தியாசமோ ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசங்கள்கூட இல்லாதபடி யேசு மேசியாவோடு ஒன்றாக இணைகிறார்கள். ஆகவே, நீங்கள் யேசு மேசியாவிற்கு சொந்தமானவர்கள் ஆகிறதால், ஆபிரகாமிற்கு கடவுள் வாக்குறுதி கொடுத்த அந்தப் புண்ணியத்தைப் பெற, உரிமைபெற்ற ஆபிரகாமுடைய பிள்ளைகளாக ஆகிறீர்கள்.

சிந்திக்க சில கேள்விகள்:

1. கலாத்திய மக்கள் தங்களுக்குள் வசிக்க வந்த ஆவியானவரை ஏன் மறந்துபோனார்கள்?

2. யார் யாரெல்லாம் ஆபிரகாமின் சந்ததிகளாக கருதப்படுகிறார்கள்?

3. யார் யார் ஆபிரகாம் போல கடவுள் புண்ணியத்தைப் பெறுகிறார்கள்?

4. அனைத்து சமுதாய மக்களுக்கும் கடவுள் புண்ணியம் எப்படிக் கிடைக்கிறது?

5. ஆபிரகாமோடு கடவுள் எப்படி ஒப்பந்தம் செய்தார்?

6. இஸ்ரவேல் மக்களுக்குச் சட்டதிட்டங்களை ஏன் கொடுத்தார்?

7. எதற்கு நேராக சட்டதிட்டங்கள் வழிநடத்துகிறது?

- யேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மூலம் செய்ததை நம்புகிறவர் களுக்குள் ஆவியானவர் வசிக்கிறார்.
- ஆபிரகாமைப் போல கடவுளை நம்புகிறவர்கள், அவர் பார்வையில் சரியான நபர் ஆகிறார்கள். கடவுள் புண்ணியத்தையும் பெறுகிறார்கள்.
- சட்டதிட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து வாழமுடியாமல் தவிக்கிற சாபத்தின் கட்டிலிருந்து யேசுவோடு இணைவதன் மூலம் கடவுள் விடுவிக்கிறார்.
- யேசுவை மையமாக வைத்து கடவுள் ஆபிரகாமோடு பண்ணிய ஒப்பந்தம் மூலம், அனைத்து சமுதாய மக்களுக்கும் கடவுள் புண்ணியம் கிடைக்கிறது.
- குற்றங்குறையுள்ளவர்கள் என்று சுட்டிக்காட்டவே சட்டதிட்டம்!
- யேசுவை நம்பி வாழ்வதன் மூலம் கடவுள் பார்வையில் சரியான நபர்களாக மாறுவதற்கு வழிகாட்டியே சட்டதிட்டம்!
- யேசுவுடைய மரணத்தையும், உயிரோடு எழுந்ததையும் நம்பி, தண்ணீரில் முழுக்கு எடுக்கிறவர்கள். யேசுவுக்குள் எந்த வேறுபாடுகளும் இல்லாத புதிய சமுதாயம்!

பாகம் - 4

4.1 அடிமை வாழ்க்கையும், கடவுள் சொத்துக்களில் உரிமை பெற்ற வாரிசு வாழ்க்கையும் (4:1–7)

இதை நான் உங்களுக்கு மேலும் விளக்கமாகச் சொல்லுகிறேன். தன் அப்பாவின் முழுச்சொத்துக்கும் உரிமை பெற்ற, ஒரே பிள்ளையாக ஒருவன் இருந்தபொழுதிலும், அவன் சிறுவனாக இருக்கும் காலம் வரை அவனுக்கும் அந்த வீட்டின் வேலைக்காரனுக்கும் பெரிய வித்தியாச மில்லை. ஏனெனில், குறிப்பிட்ட வயது ஆகும்வரை, அவனுடைய அப்பா அவனை யார் பொறுப்பில் ஒப்படைத்துப் போனாரோ, அவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டுத்தான், அவன் வாழவேண்டும். அதுபோலவே, கடவுளுடைய காரியங்களை அறியாத சிறுபிள்ளைகளாக நாம் வாழ்ந்த காலங்களில், கடவுளின் காரியங்களைத் தவிர்த்து, இந்த உலகத்தின் ஆவிகளுக்கும், அவைகளின் சக்திகளுக்கு நாம் அடிமைப்பட்டு, அவைகளுக்கு வேலைக்காரர்கள் போல நாம் வாழ்ந்து வந்தோம். ஆனால், கடவுள் குறித்த, அந்தக் காலம் வந்தபோது, அவர் தன்னுடைய மகனை ஒரு பெண்ணின் வயிற்றில் பிறக்கச்செய்து, அந்தச் சமுதாய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அவரை வாழச்செய்தார். அது எதற்காக என்றால், கடவுளோடு நட்பாகப் பழக முடியாதபடி, சமுதாய சட்டதிட்டங் களுக்கு அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்த நம்மை விடுவித்து, கடவுளுடைய பிள்ளைகள் என்ற உரிமையை நாம் பெற்றுக் கொள்ளும் படியாக, அப்படிச் செய்தார். அதுமாத்திரமல்ல, அவர் தம்முடைய மகனுடைய ஆவியானவரை, நம்முடைய உள்ளத்தில் குடியிருக்கும் படியாக அனுப்பினார். அதன் மூலமாகவே, உரிமையோடு நாம் கடவுளை அப்பா என்று கூப்பிட்டுப் பழகும் உறவு நமக்குக் கிடைத்தது.

நம்முடைய உள்ளத்தில் குடியிருக்கும் ஆவியானவர்!

ஆகவே, உங்களுடைய சமுதாய சட்டதிட்டங்களுக்கு, நீங்கள் இப்பொழுது அடிமைகள் அல்ல. மாறாக, அவருடைய ஆவியானவரைப் பெற்ற நீங்கள் ஒவ்வொருவரும், கடவுளுடைய பிள்ளைகள் என்ற உரிமையைப் பெறுகிறீர்கள். அவர் பிள்ளைகள் என்ற உரிமையைப் பெறும்பொழுது, அவர் புண்ணியங்களையும் அனுபவிக்கும் சொந்தக் காரர்களாகவும் ஆகிறீர்கள்தானே?

4.2 கடவுள் தந்த சுதந்திர வாழ்க்கையை அனுபவிக்கிறவர்களும், அடிமைகளாக வாழ்கிறவர்களும்! (4:8–15)

கடவுளை நீங்கள் அறியாமல் வாழ்ந்தபோது, கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை, கடவுள் போல காட்டிக் கொள்கிற

மற்ற காரியங்களுக்குக் கொடுத்து, அவைகளுக்கு அடிமைகளாக வாழ்ந்து வந்தீர்கள். இப்பொழுது, கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்? என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். கடவுளும், உங்களைத் தனக்கு சொந்தப் பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டார். ஆகவே, மீண்டும் கடவுளை தவிர்த்து, கடவுள் போல காட்டிக்கொள்கிற மற்ற காரியங்களை முக்கியப் படுத்தி, அவைகளுக்கு அடிமைகளாக, ஏன் வாழ விரும்புகிறீர்கள்? ஆகவேதான், நீங்கள் இப்பொழுது நல்ல நாட்கள், நல்ல மாதம், நல்ல காலம், நல்ல வருடம் என்பவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்கிறீர்கள்.

கடவுளைப்போல காட்டிக்கொள்ளுகிற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள்!

இவைகளை எல்லாம் நான் கேட்கும்பொழுது, உங்களுக்காக நான் கஷ்டப்பட்டு செய்த கடவுள் வேலை எல்லாம் வீணாகிவிடுமோ? என்று பயமாக இருக்கிறது.

ஏன் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! கடவுளைப் பற்றி நான் உங்களுக்கு சொல்லிக் கொடுக்கும்பொழுது, நான் ஒரு யூதனாக இருந்தபோதிலும், யூத சட்டதிட்டங்களைத் தவிர்த்து, உங்களைப் போல நான் வாழ்ந்தேன் தானே? ஆகவே, நீங்கள் இப்பொழுது என்னைப் போல வாழுங்கள்.

அப்பொழுது, ஒரு கஷ்டத்தையும் நீங்கள் எனக்கு கொடுக்க வில்லையே. முதல் முறையாக கடவுளின் நல்ல செய்தியை சொல்லிக் கொடுக்க நான் உங்களிடம் வந்தபொழுது, என் உடலில் பெலவீனத்தோடு உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தேன். அது இப்பொழுதும் உங்கள் நினைவில் இருக்கலாம். அப்படிப்பட்ட என் சோதனை நாட்களில்கூட, நீங்கள் என்னை அசட்டைபண்ணாமல், கடவுளுடைய ஒரு தூதன் வந்து சொன்னது போலவும், யேசு மேசியாவே வந்து பேசினது போலவும் என்னை ஏற்றுக் கொண்டீர்கள்! அப்பொழுது நீங்கள் எவ்வளவு சந்தோஷமாக நன்றி உணர்வோடு இருந்தீர்கள்? உங்கள் கண்களை எனக்குத் தாருங்கள் என்று கேட்டிருந்தால் அதைக்கூட செய்திருப்பீர்கள்? அப்பொழுது இருந்த சந்தோசமும் நன்றி உணர்வும் இப்பொழுது எங்கே போய்விட்டது?

4.3 யேசு மேசியாவின் சாயலைப் பெற்றெடுக்க அனுபவிக்கும் கர்ப்பவேதனை (4:16–20)

ஆனால், கடவுளைப் பற்றித் தவறாகச் சொல்லிக் கொடுத்தவர்கள் சொல்பேச்சைக் கேட்டு, இப்பொழுது என்னை ஒரு எதிரியைப் பார்க்கிறது போலப் பார்க்கிறீர்களே? அது ஏன்? கடவுளைப் பற்றிய உண்மையத் தானே நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தேன். உங்கள் மீது அவர்கள் பாசம் காட்டுவது நீங்கள் அவர்கள் மீது பாசம் காட்டுவதற்காக மட்டுமே என்பதையும், உங்களுக்கு என்னோடு இருக்கிற நட்பிலிருந்து பிரித்து, யூத சட்டத்திட்டங்களின்படி உங்களை வாழ வைப்பதற்காகவே என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மீது அவர்கள் பாசம் காட்டுவது நல்லதுதான். ஆனால், நான் உங்களோடு தங்கியிருக்கும் போது மாத்திரம், அப்படிப் பாசம் காட்டாமல், எப்பொழுதும் அப்படிச் செய்ய வேண்டும் தானே?

யேசு மேசியாவின் சாயலை மீண்டும் உங்களில் எப்பொழுது பார்ப்பேனோ?

கலாத்திய நாட்டில் கடவுளை நம்பி வாழும் மக்களே! எனக்குப் பிள்ளைகளானவர்களே! யேசு மேசியாவின் சாயலை மீண்டும் உங்களில் எப்பொழுது பார்ப்பேனோ? என்ற ஏக்கம், வயிற்றில் சுமக்கும் பிள்ளையை எப்பொழுது பெற்றெடுப்பேனோ! என்ற கர்ப்பகால வேதனையாக எனக்குள் இருக்கிறது. உங்களைப் பற்றி என் மனதில் இவ்வாறான குழப்பங்களும், வேதனைகளும் இருக்கிறபடியால், உங்களை நேரடியாப் பார்த்துப் பேசி உங்களுக்கு இவைகளைப் புரிய வைத்தால் நன்றாக இருக்கும் என நினைக்கிறேன்.

4.4 கடவுள் இஸ்ரவேல் மக்களோடு பண்ணிய இரண்டு ஒப்பந்தங்களும், அதின் அர்த்தங்களும்! (4:21–31)

யூத சமுதாய சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க விரும்புகிறீர்கள்தானே? அப்படியானால், அதிலுள்ள அர்த்தங்களை நீங்கள் புரிந்துகொண்டு இருக்கிறீர்களா? அதன் அர்த்தம் என்னவென்றால் ஆபிரகாமிற்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். அதில் ஒரு மகன் அவருடைய அடிமை மனைவிக்குப் பிறந்தவன். இன்னொரு மகன் அவருடைய அடிமையல்லாத மனைவிக்குப் பிறந்தவன், என்று எழுதி இருக்கிறதுதானே. அவருடைய அடிமை மனைவிக்குப் பிறந்தவனோ, வழக்கமான முறையில் பிறந்த மகன். ஆனால், அவருடைய அடிமையல்லாத மனைவிக்குப் பிறந்த மகனோ, கடவுள் வாக்குறுதி கொடுத்ததால் பிறந்த மகன். இந்த இரண்டு மகன்களையும், மனிதர்களோடு கடவுள் பண்ணிய இரண்டு ஒப்பந்தங்களோடு ஒப்பிடலாம். ஆகார் என்ற அந்த அடிமை மனைவிக்குப் பிறந்த மகனை, எதோடு ஒப்பிடலாம் என்றால், கடவுள் சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களோடு பண்ணிய ஒப்பந்தத்தோடு ஒப்பிடலாம்.

சீனாய் மலை ஒப்பந்தம் - சட்ட திட்டங்களுக்கு அடிமைகளானவர்கள்!

ஏனெனில், அந்தச் சீனாய் மலை அரபு நாட்டில்தானே இருக்கிறது? அந்த ஆகாரும், அவள் பிள்ளைகளும் அடிமைகள்தானே? அது போன்றே, அந்த சீனாய் மலையில் வைத்து, கடவுள் மோசே மூலம் கொடுத்த சட்டதிட்டங்களுக்கு, எருசலேம் நகர மக்களும், இஸ்ரவேல் சமுதாய மக்கள் அனைவரும் அடிமைகளாக மாறிப்போனார்கள். ஆனால், சாராளோ, ஆபிரகாமின் அடிமை மனைவியாக இல்லாதபடியால், அவளுக்குப் பிறந்த மகன், கடவுள் வாழும் உலகில் உள்ள எருசலேம் நகரத்திற்குச் சமம். யூத சமுதாய சட்டதிட்டங்களுக்கு நாம் அடிமைகளாக வாழாதபடியால், நாம் அவளுக்குப் பிறந்த பிள்ளைக்குச் சமமானவர்கள். அதுமாத்திரமல்ல. பிள்ளைகளைப் பெற்றெடுக்காதவளே! கர்ப்ப வேதனையை அனுபவியாதவளே!

சந்தோஷத்தில் கொண்டாடு. ஏனெனில், கணவனோடு சேர்ந்து பிள்ளைகளைப் பெற்றெடுப்பதைவிட உனக்கு கிடைக்கும் பிள்ளைகளே ஏராளம். என்றும் கடவுள் புத்தகத்தில் எழுதியிருக்கிறதுதானே.

என் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! கடவுள் ஆபிரகாமிற்கு வாக்குறுதி கொடுத்ததால் பிறந்த ஈசாக்கு போன்று நாம் அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள்.

மேல் உலக எருசலேமுக்குச் சொந்தமானவர்கள் ஆவியானவரால் மறுபடி பிறந்தவர்கள்!

ஆனால், இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் வழக்கமான முறையில் பிறந்த மகன், கடவுள் வாக்குறுதி கொடுத்ததால், சுத்தமான ஆவியானவரின் சக்தியால் பிறந்த மகனை அப்பொழுது துன்பப்படுத்தியது போலவே, இப்பொழுதும் நடக்கிறது. மேலும், அடிமையல்லாத மனைவிக்குப் பிறந்த மகனுக்கு உரிய சொத்தில், அடிமை மனைவிக்குப் பிறந்த மகனுக்கு பங்கு இல்லாதபடியால், அவளையும், அவள் மகனையும் வீட்டைவிட்டு அனுப்பிவிடு என்று கடவுள் புத்தகத்தில் எழுதி இருக்கிறதுதானே? ஆகவே, என் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! நாம் அந்த அடிமை மனைவிக்குப் பிறந்த பிள்ளையைப் போன்றவர்கள் அல்ல மாறாக அடிமையல்லாத மனைவி பெற்றெடுத்த மகனைப் போன்று அப்பாவின் சொத்தை அனுபவிக்கும் உரிமையுள்ள பிள்ளைகள்.

சிந்திக்க சில கேள்விகள்:

1. கடவுளாகிய அப்பாவின் சொத்தை அனுபவிக்கும் உரிமை யாருக்கு இல்லை?

2. கடவுளுடைய பிள்ளைகள் என்ற உரிமையை நாம் பெற்றுக் கொள்ள கடவுள் என்ன செய்தார்?

3. கடவுளை அப்பா என்று கூப்பிட்டுப் பழகும் உரிமை நமக்கு எப்படிக் கிடைத்தது?

4. கலாத்தியா நாட்டு சபையார்கள் பவுலை ஏன் ஒரு எதிரியைப் போல நினைத்தார்கள்?

5. பவுல் எதற்காக கர்ப்பவேதனைப்படுவதாக குறிப்பிடுகிறார்?

6. சீனாய் மலை ஒப்பந்தத்தைப் பவுல் எதோடு ஒப்பிடுகிறார்?

7. சாராளுக்குப் பிறந்த மகனை பவுல் யாரோடு ஒப்பிடுகிறார்?

முக்கிய கருத்துக்களின் சுருக்கம் :

- கடவுளைப் பற்றிப் புரியாமல், சமுதாய சட்டதிட்டங்களுக்கு அடிமைகளாக வாழ்ந்த நம்மை விடுவிக்க, அவருடைய மகன் யேசுவைப் பிறக்கச் செய்தார்.

- அவருடைய மகன் யேசுவின் ஆவியை நம் உள்ளத்தில் குடியிருக்கச் செய்து, கடவுளை அப்பா என்று கூப்பிட்டு பழகும் உரிமையை உருவாக்கினார்.

- அந்த உரிமையின் மூலம் அப்பாவின் சொத்தில் அல்லது புண்ணியங் களை அனுபவிக்கும் சொந்தக்காரர்கள் ஆக்கினார்.

- கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை வேறு எதற்குக் கொடுத்தாலும், அது அவைகளுக்கு அடிமைகளாக வாழவைக்கும், மேலும், யேசுவின் சாயலில் வளரவிடாமல் தடுக்கும்!

- இஸ்மவேல் போன்று அடிமையாக வாழாமல், ஈசாக்கு போன்று, மேல் உலக எருசலேம் நகருக்குச் சொந்தக்காரர்களாக நாம் வாழ வேண்டும்.

பாகம் - 5

5.1 சமுதாய சட்ட திட்டங்களுக்கு அடிமைகளாக வாழாதிருங்கள் (5:1–6)

சட்ட திட்டங்களுக்கு அடிமையாக வாழ்ந்த வாழ்விலிருந்து, யேசு மேசியா உங்களை விடுவித்து இருக்கிறபடியால், விடுதலையான இந்த வாழ்விலேயே தொடர்ந்து வாழுங்கள். அந்த அடிமை மனைவியின் பிள்ளைகள்போல, மீண்டும் அடிமையாக ஏன் வாழ விரும்புகிறீர்கள்? பவுலாகிய நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்! சுன்னத் பண்ணினால்தான் கடவுள் என்னை ஏற்றுக்கொள்வார் என நீங்கள் நம்பினால், யேசு மேசியாவினால் உங்களுக்கு ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை.

சுன்னத் போன்று உடலில் செய்யும் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள், யேசு மூலம் கடவுள் காட்டும் தயவை இழந்து, அவரை விட்டுப் பிரிந்து போகிறார்கள்!

அதையும் மீறி சுன்னத் பண்ணினால்தான் கடவுள் என்னை ஏற்றுக்கொள்ளுவார் என்று, உங்களில் ஒருவன் நம்பினால், இஸ்ரவேல் சமுதாய சட்டதிட்டங்கள் ஒன்றுவிடாமல் கடைப்பிடித்து வாழ, அவன் கடனாளியாகிறான் என்பதை மனதில்கொள்ளுங்கள். ஏனெனில், அந்த சமுதாய சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் கடவுள் பார்வையில் சரியான நபராக வாழ, யார் எல்லாம் முயற்சிக்கிறார்களோ, அவர்கள், யேசு மேசியா மூலம் கடவுள் தங்களுக்குக் காட்டிய தயவு தேவையில்லை என்ற எண்ணத்தில், அவரை விட்டுப் பிரிந்தவர்கள் ஆகிறார்கள்.

யேசுவை நம்பி வாழ்வதால் ஒருவருக்கொருவர் காட்டுகிற அன்பே மிகவும் முக்கியமானது!

ஆனால், நாங்களோ, எங்களுக்குக் கிடைத்த சுத்தமான ஆவியானவர் தரும் நம்பிக்கையின் மூலமாகவே, கடவுள் பார்வையில் நம்மைச் சரியான நபராக மாற்றிக் கொள்வார் என்ற எதிர்பார்ப்போடு வாழ்கிறோம். ஆகவே, யேசு மேசியாவுடன் இணைந்து வாழ்கிறவர்களுக்கு சுன்னத் செய்வதோ செய்யாததோ ஒரு விசயமே அல்ல மாறாக, அவரை நம்பி வாழ்வதால் ஒருவருக்கொருவர் காட்டுகிற அன்பே மிகவும் முக்கியமானதாகிறது.

5.2 கடவுள் திட்டத்தைக் குழப்புகிறவர்களுக்கு கடவுள் தண்டனை நிச்சயம் (5:7–10)

யேசு மேசியா மூலம் கடவுள் உங்களுக்காக செய்து முடித்தவைகளை நம்பி, நன்றாக நீங்கள் வாழ்ந்து வந்தீர்களே? அந்த உண்மை வாழ்விலிருந்து எவன் உங்களை வழிதவறச் செய்தான்? எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ கடவுள் உங்களை அழைத்தாரோ, அதிலிருந்து உங்களை வழிதவறச் செய்கிறவன் எவனும் கடவுளுக்குரியவன் அல்ல. எப்படியெனில், மிகச்சிறிய அளவிலான புளித்த மாவு, எவ்வளவு அதிகமான மாவாக இருந்தாலும், அவைகள் அனைத்தையும் புளிக்கச் செய்வது போலவே, கடவுளைப் பற்றி தவறானவைகளை ஒரு சிலரிடம் அவர்கள் சொல்லிக்கொடுப்பவைகள், அநேகரிடம் சீக்கிரமாக பரவுகிறது.

யேசுவுக்குள் வாழ்கிறவர்களை குழப்புகிறவர்களுக்கு கடவுள் தண்டனை நிச்சயம்!

நான் சொல்லுகிற இந்தக் கருத்துக்களை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள், என நான் நம்புகிறேன். மேலும், யேசு மேசியாவுக்குள்ளான உங்கள் வாழ்க்கையை குழப்புகிறவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சரி, கடவுளின் தண்டனைக்கு அவன் தப்பிக்க முடியாது.

5.3 யேசு மேசியா செய்ததை நம்புகிறவர்களைதான், கடவுளுக்குப் பிடிக்கும்! (5:11–12)

என் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! கடவுளுக்கு நம்மைப் பிடிக்கவேண்டுமானால், நாம் சுன்னத் செய்யவேண்டும் என்று அவர்கள் சொல்லுவதுபோல, நான் பிரசங்கித்தால், என் பிரசங்கத்தை அவர்கள் எதிர்க்கப்போவதும் இல்லை, என்னை அவர்கள் துன்புறுத்தப் போவதும் இல்லை. ஆனால், யேசு மேசியா, சிலுவை மரத்தில் மரித்தது மூலம், நமக்காக செய்ததை நம்புகிறவர்களைத்தான், கடவுளுக்குப் பிடிக்கும் என்று நான் பிரசங்கிப்பதுதான், அவர்களுக்கு முட்டாள்தனமாகத் தோன்றுகிறது.

நுனித்தோலை வெட்டினால் கடவுள் உங்களை ஏற்றுக்கொள்வார் என்று சொல்லுகிறவர்களை விட்டு விலகுங்கள்!

ஆகவே, உடலின் ஒரு பாகத்திலிருந்து நுனித்தோலை நீங்கள் வெட்டிக்கொள்ள வேண்டும் என்று சொல்லி உங்களைக் குழப்புகிறவர்கள், உங்களோடு அவர்களுக்கு இருக்கிற உறவில் இருந்து, தங்களைத் தாங்களே வெட்டிக்கொண்டு வெளியேறிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

5.4 ஒரே கட்டளைக்குள் அடங்கும் கடவுள் கட்டளைகள்! (5:13–15)

என் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! இந்த உலக, சமுதாய சட்டதிட்டங்களில் சிக்கி வாழ்ந்த உங்களை, யேசு மேசியா விடுவித்தது, மீண்டும் நீங்கள் குற்றங்குறைகளைச் செய்ய வைக்கும் குணத்தில் சிக்குண்டு வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அல்லாமல், ஒருவொருக் கொருவர் காட்டும் அன்பின் வாழ்வில் நீங்கள் கட்டப்பட்டு வாழவே, என்பதை மனதிற்கொள்ளுங்கள்.

குற்றங்குறைகளைச் செய்ய வைக்கும்
குணத்தில் மீண்டும் சிக்கிக் கொள்ளாதீர்கள்!

ஏனெனில், கடவுள் தந்த கட்டளைகள் அனைத்தையும் சேர்த்து ஒன்றாக்கிச் சொன்னால், உன்னை நீ எவ்வளவு நேசிக்கிறாயோ, அதுபோலவே மற்றவரையும் நேசி என்று ஒரே கட்டளையாக்கிச் சொல்லிவிடலாம். இந்தக் கட்டளையை மறந்து, உங்களுக்குள் ஒருவரையொருவர் குறைசொல்லி, சண்டைபோட்டு, வாழ்ந்தால், உங்கள் வாழ்வை ஒருவருக்கொருவர் நீங்களே அழித்துக் கொள்வீர்கள். ஆகவே, எச்சரிக்கையாயிருங்கள்!

5.5 ஆவியானவர் தரும் ஆலோசனையின்படி வாழும் வாழ்க்கை (5:16-18)

மேலும், நான் சொல்வதைக் கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தில் வசிக்கிற சுத்தமான ஆவியானவருக்கு நீங்கள் செவிகொடுத்து வாழ்ந்தால், நீங்கள் உங்கள், சுயநலமான ஆசை, விருப்பங்களின்படி வாழ மாட்டீர்கள்.

சுயநலமான ஆசைகள், விருப்பங்களும்,
ஆவியானவர் தரும் ஆசைகள் விருப்பங்களும்!

ஏனெனில், சுத்தமான ஆவியானவர் உங்களுக்குத் தரும் ஆசை விருப்பங்களுக்கு எதிரிடையாகவே, உங்கள் சொந்த ஆசை, விருப்பங்கள் அமைகிறது. ஆகவே, சுத்தமான ஆவியானவர் தரும் ஆசை விருப்பங்களை எதிர்ப்பதுபோன்ற, உங்கள் சுயநலமான ஆசை விருப்பங்கள் இருக்கும். ஆகவே, நீங்கள் ஆசைப்படுகிற அனைத்தையும் உங்களால் செய்ய முடியாது. உங்கள் ஆசை, விருப்பங்களை சுத்தமான ஆவியானவர் ஆளுகை செய்வாரானால், யூத சமுதாய சட்டதிட்டங் களிலிருந்து நீங்கள் விடுவிக்கப்பட்ட சுதந்திரமான வாழ்க்கை வாழ்வீர்கள்.

5.6 மனிதர்களுடைய சொந்த ஆசைகள், விருப்பங்கள்! (5:19–21)

அதுமாத்திரமல்ல, உங்கள் சுயநலமான ஆசை விருப்பங்கள மூலம் செய்கிற செயல்கள் எவைகள் என்று நீங்கள் எளிதாக கண்டறியலாம். அவைகள் திருமண பந்தமில்லாத பாலுறவு, தவறான பாலுறவு, அப்படிப்பட்ட தவறான பாலுறவு எண்ணங்களிலேயே தொடர்ந்து வாழுதல், கடவுளைவிட மற்றவைகளை, மற்றவர்களை உயர்வாக நினைத்து வணங்குதல், ஒருவர் மீது பகை வைத்துச் சபித்தல், அவர்கள் அழிந்து போக, கெட்ட ஆவிகளை ஏவுதல், பொறாமைப்படுதல், கோபமடைதல், மற்றவர்களோடு ஒத்துப்போகாமல், சண்டை போடுதல், உறவுகளைப் பிரித்து, தனக்கென ஒரு கூட்டம் சேர்த்தல், தனக்கு இருப்பதில் திருப்தியின்மை, குடித்து தன்னை மறந்திருக்கும் எண்ணம், குடித்து கும்மாளமிடுதல், போன்றவைகளைச் செய்து வாழ்கிறவர்களுக்குக் கடவுளுடைய நாட்டை சொந்தமாக்க ஒருபோதும் முடியாது. அவ்வாறு செய்து வாழ்கிறவர்களை நான் முன்பு எச்சரித்ததுபோலவே, மீண்டும் ஒருமுறை எச்சரிக்கிறேன்.

5.7. ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்கள் (5:22–26)

ஆனால், சுத்தமான ஆவியானவர் தரும் ஆசை விருப்பங்கள் என்னவென்றால், மற்றவர்கள் மீது அன்பு காட்டும் எண்ணம், கடவுள் தரும் மகிழ்ச்சி, கடவுளால் கிடைக்கும் மனஅமைதி, கஷ்ட நஷ்டங்களைச் சகிக்க கடவுள் தரும் பெரிய பொறுமை, மற்றவர்களுக்குத் தயவு காட்டுதல், கடவுள் தரும் நல்ல குணங்கள், நம்பிக்கைக்குரியவராக வாழும் வாழ்க்கை, கடவுள் தரும் சாந்தகுணம், கெட்ட ஆசை விருப்பங்களை அடக்குதல், இதுபோன்ற கடவுளுடைய நல்ல குணங்களை பெற்று வாழ வைக்க எந்த சட்டங்களாலும் முடியாது!

கடவுளுடைய நல்ல குணங்களை பெற்று
வாழ வைக்க எந்த சட்டங்களாலும் முடியாது,
ஆனால் ஆவியானவரால் முடியும்!

அப்படியாக, தங்கள் வாழ்வை யேசு மேசியாவோடு இணைத்துக் கொண்டு வாழ்கிறவர்களோ தங்களுடைய சுயநலமான ஆசை விருப்பங்கள் அனைத்தையும், மனித சுபாவத்தையும் யேசு சிலுவை மரத்தில் மரித்ததோடு அழித்து வாழ்கிறார்கள். அதுமாத்திரமல்ல, சுத்தமான ஆவியானவரோடு சேர்ந்து, புதுவாழ்வு வாழ்கிற நாம் அனைவரும், அந்த ஆவியானவர் தரும் நினைவுகளால் நிறைந்து வாழவேண்டும். ஆகவே, நமக்கு இருப்பதில் திருப்தியில்லாமல், மற்றவர்களைவிட நம்மை உயர்வாக நினைத்து, போட்டிபோடும் வாழ்வு வாழாமல் இருப்போமாக.

சிந்திக்க சில கேள்விகள்:

1. யேசு மேசியாவால் கிடைக்கும் பயன் யாருக்கு கிடைக்காமல் போகிறது? அது ஏன்?

2. யார் கடவுளைவிட்டு பிரிந்தவர்கள் ஆகிறார்கள்?

3. யார் கடவுளுக்கு உரியவர்கள் அல்ல?

4. கடவுளுடைய தண்டனைக்கு யார் தப்பிக்க முடியாது?

5. யாரை கடவுளுக்குப் பிடிக்கும்?

6. யாரோடு நட்புறவு வைத்துக்கொள்ளக்கூடாது?

7. எதில் மீண்டும் சிக்கிக் கொள்ளக்கூடாது?

8. எதில் கட்டப்பட்டு வாழவேண்டும்?

9. எப்படி வாழ்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்கிறார்கள்?

10. சுயநலமான ஆசை விருப்பங்களின்படி வாழாதிருக்க என்ன செய்ய வேண்டும்?

11. சுயநலமான ஆசை விருப்பங்களால் செய்யப்படும் செயல்கள் எவையெவைகள்?

12. சுயநலமான ஆசை விருப்பங்களின்படி வாழ்கிறவர்களால் எதைச் சொந்தமாக்க முடியாது?

13. ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்கள் என்னென்ன?

14. யேசு மேசியாவோடு இணைந்து வாழ்கிறவர்கள் எப்படி வாழவேண்டும்?

முக்கிய கருத்துக்களின் சுருக்கம் :

- உடலில் செய்யும் சில சடங்குகளால், கடவுள் நம்மை ஏற்றுக் கொள்ளுவார் என்று நம்புகிறவர்களுக்கு, யேசு மேசியாவால் கிடைக்கும் எந்த பயனும் கிடைக்கப்போவதில்லை.
- ஆவியானவர் தரும் நம்பிக்கையின் மூலமாகவே, கடவுள் பார்வையில் சரியான நபராக மாற முடியும்.
- யேசு மேசியா மூலம் கடவுள் செய்து முடித்தவைகளை நம்பி வாழ்கிறவர்களைக் குழப்புகிறவர்களுக்குத் தண்டனை நிச்சயம்
- உன்னை நீ எவ்வளவு நேசிக்கிறாயோ, அதுபோலவே மற்றவரையும் நேசி என்ற கட்டளைக்குள் எல்லா கட்டளைகளும் அடங்கும்.
- ஆவியானவருக்கு செவிகொடுத்து வாழ்கிறவர்கள், சுயநலமான ஆசை, விருப்பங்களின்படி வாழமாட்டார்கள்.
- சுயநலமான ஆசை, விருப்பங்களின்படி வாழ்கிறவர்களுக்கு கடவுளுடைய நாட்டை சொந்தமாக்க முடியாது
- கடவுளுடைய குணங்களை பெற்று வாழ வைக்க எந்த சட்டங்களாலும் முடியாது! ஆவியானவரால் மட்டும் முடியும்!

பாகம் - 6

6.1 யேசு மேசியாவின் சாயலில் வளர ஒருவருக்கு ஒருவர் செய்யும் உதவி (6:1-6)

என் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! உங்களுக்குள் யாராவது, தங்கள் சொந்த ஆசை, விருப்பங்களில் வாழ்ந்து, குற்றங்குறைகளில் சிக்கிக்கொண்டு இருப்பார்களானால், ஆவியானவர் தரும் சிந்தைகளில் வாழ்கிற நீங்கள், அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் உதவி செய்யும்பொழுது, ஆவிக்குரிய பெருமை ஏதுவும் இல்லாமல், உதவி செய்யுங்கள்! இல்லை என்றால், நீங்களும் குற்றங்குறைகளைச் செய்கிற சோதனைகளில் சிக்கிக்கொள்ள வேண்டியது வரும். ஆகவே கவனம் தேவை! அப்படியாக, மற்றவர்களுக்கு நீங்கள் உதவி செய்யும்பொழுது, உங்கள் கஷ்டங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்! என்ற யேசு மேசியாவின் கட்டளையை கைக்கொண்டு வாழமுடியும். மற்றவர்களை விட நான்தான் பெரியவர்! என்ற எண்ணத்தில் உங்களில் யாராவது வாழ்ந்தால், அவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறார். ஆகவே, யேசு மேசியாவுக்குள் நீங்கள் எவ்வளவு வளர்ந்து இருக்கிறீர்கள்? என்ற நினைவோடு நீங்கள் வாழ்ந்தால், மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டு வீண்பெருமை கொள்ளமாட்டீர்கள். அதுமாத்திரமல்ல, உங்கள் வளர்ச்சிக் கேற்ற பொறுப்புகளையும், வேலைகளையும் செய்து, திருப்தியாக உங்களால் வாழ முடியும். ஏனெனில், ஒவ்வொருவருக்கும் கடவுள் தந்த வேலைகளை, பொறுப்போடு செய்ய வேண்டும்.

வீண் பெருமைகளைத் தவிர்க்க, யேசு மேசியாவுக்குள் உங்கள் வளர்ச்சியை எப்பொழுதும் அளவிடுங்கள்!

மேலும், கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்ள, அவர் புத்தகத்திலிருந்து, யார் உங்களுக்கு சொல்லிக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு உங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் நீங்கள் செய்யவேண்டும்.

6.2 ஆவியானவரின் ஆசை விருப்பங்களின்படி வாழும் பலனுள்ள வாழ்க்கை! (6:7-10)

ஒருவரும் கடவுளை ஏமாற்ற முடியாது. ஏனெனில், நல்லது செய்தால் அவரிடமிருந்து நல்லதைப் பெறுவான். கெடுதல் செய்தால் அவன் செய்த கெடுதலுக்குத் தக்க பலனைப் பெறவேண்டியது இருக்கும். ஆகவே, உங்கள் வாழ்க்கையை, நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். தங்கள் சுயநலமான ஆசை விருப்பங்களின்படி யாரெல்லாம் வாழ்கிறார்களோ, அவர்கள் நடத்தைக்கேற்றபடி காலங்காலமாக வாழ்ந்திருப்பார்கள். ஆகவே, ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்களின்படி நீங்கள் வாழ்ந்தும், கஷ்டப்பட நேர்ந்தால் சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் அவ்வாறு வாழ்ந்த வாழ்க்கைக்குரிய பலன் நிச்சயம் ஒருநாள் உங்களை வந்தடையும்.

ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்களின்படி வாழ்ந்த வாழ்க்கைக்குரிய பலன் நிச்சயம் ஒரு நாள் உங்களை வந்தடையும்!

அதுமாத்திரமல்ல, உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யுங்கள். குறிப்பாக, யேசு மூலமாக கடவுளை நம்பி வாழ்கிற நம் குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யுங்கள்.

6.3 யேசு மேசியா செய்து முடித்ததை பெருமையாகப் பேசி, வாழும் வாழ்க்கை! 96:11-17)

இந்த கடிதத்தில் பெரிய எழுத்தில் எழுதுகிற, இந்தப் பகுதியை நானே, என்னுடைய கையால் எழுதுகிறேன்! சிலுவை மரத்தில் யேசு மேசியா அடிக்கப்பட்டு, செத்ததில் உள்ள உண்மைகளைப் பிரசங்கித்தால், தங்களுக்கு வரும் துன்பங்களை நினைத்தே, நீங்களும் சுன்னத் பண்ணிக்கொண்டால், கடவுளுக்கு உங்களைப் பிடிக்கும் என்று சிலர் பிரசங்கிக்கிறார்கள். இதை வைத்துதான் தங்களைப் பக்திமான்களாகவும்,

அவர்கள் காட்டிக் கொள்கிறார்கள். அவ்வாறாக சுன்னத்தைப் பற்றி பிரசங்கம் பண்ணுகிற அவர்கள், மற்ற யூத சட்டதிட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து வாழ்வதும் இல்லை. மாறாக, சுன்னத்தை மட்டும் முக்கியப்படுத்தி, உங்களையும், அவர்களோடு சேர்த்துக் கொண்டு பெருமை கொள்கிறார்கள். ஆனால் நானோ, நம்முடைய வாழ்வை ஆளும் யேசு மேசியா நமக்காக சிலுவை மரத்தில் மரித்ததன் மூலம், செய்து முடித்ததை மாத்திரம் நினைத்து பெருமைப்படுகிறேன். ஏனெனில், யேசு மேசியாவை நம்பி வாழாதவர்களுக்கு இந்த உலகத்தில் எவைகள் எல்லாம் மிகவும் முக்கியமாகத் தெரிகிறதோ, அவைகள் எல்லாம் எனக்கு முக்கியமில்லை, மேலும், எனக்கு இப்பொழுது எவைகள் எல்லாம் மிகவும் அவசியமோ, அவைகள் அவர்களுக்கு ஒரு மதிப்பும் இல்லாததாக இருக்கிறது. ஆகவே, சுன்னத் பண்ணுவதோ, பண்ணாதிருப்பதோ முக்கியமில்லை. யேசு மேசியாவுக்குள் புதிய மனிதனாக வாழ்வதே மிகவும் முக்கியமானது.

யேசு மேசியாவுக்குள் புதிய மனிதனாக வாழ்வதே மிகவும் முக்கியம்!

ஏனெனில், அப்படி வாழ்கிறவர்களே உண்மையான இஸ்ரவேல் சமுதாயத்தார்கள். நம் வாழ்வை ஆளும் யேசு மேசியாவின் தயவு உங்கள் அனைவருக்கும் கிடைப்பதாக.

யேசு மேசியா துன்பப்பட்டது போல நானும் இப்பொழுது துன்பப்படுகிறேன். ஆகவே, சுன்னத் பண்ணுகிற இந்த விஷயத்தில் இனிமேல் எவரும் என்னை வருத்தப்படுத்தாதீர்கள். யேசு கூட்டத்தைச் சேர்ந்த, என் அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! நம் வாழ்வை ஆளும், யேசு மேசியா உங்கள் மீது காட்டும் தயவால், நீங்கள் அவருக்குள் வளர்வீர்களாக. ஆம்! அப்படியே நடப்பதாக!

சிந்திக்க சில கேள்விகள்:

1. யேசு மேசியாவின் சாயலில் வளர, யார் யாருக்கு உதவி செய்ய வேண்டும்?
2. அப்படி உதவி செய்யும்பொழுது, எதில் கவனமாக இருக்க வேண்டும்?
3. தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறவர் யார்?
4. வீண்பெருமைக்கு இடம்தராமல் வாழ என்ன செய்யவேண்டும்?
5. நம்மால் முடிந்த உதவிகளை யாருக்குச் செய்யவேண்டும்?
6. யார் அழிவை சந்திப்பார்கள்?
7. யார் காலங்காலமாக வாழ்வார்கள்?
8. யாருக்கு நன்மை செய்யவேண்டும்?

9. சுன்னத் செய்வதை முக்கியப்படுத்தி பிரசங்கிக்கிறவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்?

10. எதை நாம் பெருமையாகப் பேச வேண்டும்?

11. எதை விட, எது மிகவும் முக்கியம்?

12. யார் உண்மையான இஸ்ரவேல் சமுதாயத்தார்கள்?

13. ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்கள் என்னென்ன?

14. யேசு மேசியாவோடு இணைந்து வாழ்கிறவர்கள் எப்படி வாழவேண்டும்?

முக்கிய கருத்துக்களின் சுருக்கம் :

- ஆவியானவரோடு இணைந்து வாழ்கிறவர்கள், அதில் தடுமாற்றத்தோடு வாழ்கிறவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.
- பெருமை வராமல் உதவி செய்தால், சோதனைகளுக்குத் தப்பிக்கலாம்.
- சுயநலமான ஆசை விருப்பங்களின்படி வாழ்கிறவர்கள் அழிவைச் சந்திக்கிறார்கள்!
- ஆவியானவர் தரும் ஆசை விருப்பங்களின்படி வாழ்கிறவர்கள் காலங்காலமாக வாழ்கிறார்கள்!
- யேசு மேசியா நமக்காக சிலுவை மரத்தில் மரித்ததின் மூலம், செய்து முடித்ததை மாத்திரம் பெருமையாகப் பேச வேண்டும்!